# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
# SIRKALI
## DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
## Case No.STC- 1245/2024

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | SI. முருகவேல் | Prosecution | LW-6 as PW -6 |
| Fathers Name | பட்டு | Defence | |
| Village | PEW-Mayiladuthurai | Taluk | |
| Calling | | Age | 55 /2025 |

**Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day**

**23.06.2025. எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**1.** நான் தற்போது மயிலாடுதுறை மதுவிலக்கு அமல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சமயத்தில் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன். கடந்த 17.07.2022ம் தேதி 17.30 மணிக்கு மனு எண் 382/2022 பதிவு செய்து சம்பவ இடம் சென்று, கடந்த 14.07.2022 இரவு சுமார் 11.15 மணிக்கு, மனுதாரர் முருகன் கொடுத்த புகாரை பெற்று, எதிர் மனுதாரர்களை விசாரிக்க, மனுதாரரை எதிர் மனுதாரர்கள் கிராமத்தில் நடைபெற்ற திருவிழா சம்பந்தமாக முன் விரோதம் ஏற்பட்டு, ராஜேந்திரன் மகன் விஜயகுமார், ரகுபதி, வீரமுத்து ஆகிய மூவரும் சேர்ந்து மனுதாரரை கீழே கிடந்த கட்டைக்கழியால் எடுத்து காலிலும் கையிலும் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தி, காயம் எதுவும் பெரிய காயம் இல்லாத காரணத்தால், முதலுதவி செய்து கொண்டு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார்.

2. அவர் கொடுத்த புகாரை பெற்று, மனுவில் கண்டுள்ள சட்டப்பிரிவு 295(b), 352, 506(1) IPC ஆக 18.07.2022ம் தேதி காலை 9.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) . பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிகண்டன் மற்றும் சாரங்கபாடி முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் ஆகியவை தயார்

செய்தேன். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு பட்டியல் சாட்சிகள் 1–3 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகளை தேடிய நிலையில், எதிரிகள் மூவரும் மாண்புமிகு அமர்வு நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் முன்பிணை பெற்றிருந்ததால் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் இந்த வழக்கின் விசாரணையை முடித்து கடந்த 01.08.2022ம் தேதி எதிரிகளுக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 352, 506(1)ன் கீழ் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. புகார்தாரர் காவல் நிலையத்திற்கு நேரடியாக வந்து தான் புகார் கொடுத்தாரா என்றால் ஆமாம். 17.07.2022ம் தேதி 17.30 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் தான் மனு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரில் சம்பவம் நடைபெற்றது 14.07.2022ம் தேதி இரவு சுமார் 11.15 மணிக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்து புகார்தாரர் மருத்துவ சிகிச்சையில் இருந்ததற்கு சான்றாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டதற்கு காரணமும் மேற்படி புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கும் எதிரிகள் தரப்பிற்கும் முன் விரோதம் உள்ளது என்றால் இந்த வழக்கில் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். உகாதாரருக்கு காயம் ஏற்பட்டது வலது காலிலா அல்லது இடது காலிலா என்பது பற்றி குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த புகார் சம்பவம் குறித்து வேறு நபர்களுக்கு தெரியும் என்று சொல்லி புகாரில் புகார்தாரர் யாருடைய பெயரையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உதாகாரர் தான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்று தான் புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2.கடந்த 14.07.2022ம் தேதி இரவு 23.00 மணிக்கு சீர்காழி அரசு மருத்துவமனையில் வைத்து எதிரி விஜயகுமாரிடம் நான் வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரிதான். அதன் பேரில் நிலையம் வந்து 375/2022 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 18.07.2022ம் தேதி காலை 9.00 மணிக்கு மேற்படி புகார் அடிப்படையில் குற்ற எண் 123/2022 பிரிவுகள் 294(b), 323, 506(1) ஆகியவற்றின் கீழ் புகார்தாரர் முருகன், அம்மையப்பன் மற்றும் வீரமணி ஆகிய

மூவர் மீதும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முருகனுக்கு எதிராக 14.07.2022ம் தேதியே எதிரியால் புகார் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், 17.07.2022ம் தேதி முருகன் எங்கள் காவல் நிலையத்திற்கு வந்த நிலையில், நான் எதற்காக முருகனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்த சம்பவத்தில் முருகனும் பாதிக்கப்பட்டு உள்காயத்தோடு நிலையம் வந்தார். மேற்படி உள் காயம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவர் கால்கள் மற்றும் கைகள் வீங்கி இருந்ததை நான் கண்கூடாக பார்த்தேன். முருகனும் அந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டிருந்ததால் நாங்கள் அவரை கைது செய்யவில்லை. எதிரி மேற்படி புகாரில் 14.07.2022 ம் தேதி இரவு 10.00 மணிக்கு தன்னை முருகன் மற்றும் அவரது கூட்டாளிகள் சேர்ந்து அசிங்கமாக திட்டி, அடித்து, கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எதிரி விஜயகுமாரை மேற்படி புகார் தரப்பினர் அடித்ததால் அவருக்கு இடுப்பு எலும்பில் முடிவு ஏற்பட்டுள்ளது பற்றி விசாரணைகள் தெரிந்து கொண்டேனா என்றால் காயம் பட்டதை தெரிந்து கொண்டேன் ஆனால் காய சான்றிதழ் இன்னும் வாங்கவில்லை. மேற்படி குற்ற சம்பவத்தில் உண்மையில் பாதிக்கப்பட்டது எதிரி விஜயகுமார் தான் என்றால் சரியல்ல. அவர் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதற்காக பதில் புகார் ஒன்று எங்கள் இணையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று சரியாக விசாரிக்காமல் ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக குற்ற பத்திரிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.